

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஜூலை
2005

ஆசிரியர்
B.அர்ஜூனன்

மரம் 5 கனி 8

## கிறிஸ்துவின் வசன மாத இதழின் பத்தொன்பதாவது
## வாசகர் கருத்தரங்கு

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கிற்கு பெரம்பலூர் மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களை அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம்.

**நோக்கம் :** ★ 1992முதல்2004 வரை வெளிவந்த இதழைக் குறித்த ஓர் ஆய்வு
★ பத்தொன்பதாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை
★ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு

**நாள் :** ஜூலை 30 - ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி

**இடம் :** 20 A குமரன் நகர், மேலக்குடியிருப்பு ரோடு, கரடிகுளம் P.O, ஜெயங்கொண்டம், பெரம்பலூர் மாவட்டம்.

மேலும் விபரமறிய
The Word of Christ
9545432•3278

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*
சகோ . ஜான்

*வாருங்கள்!* *பங்குபெறுங்கள்!!* *அறிந்து கொள்ளுங்கள்!!!*

## *வாசகர் கடிதம் . . .*

கிறிஸ்துவுக்குள் அன்பான ஐயா அவர்களுக்கு,

வணக்கம். நமது ஊழியர்கள் சென்னை கீழ்ப்பாக்கம் வாட்டர் டாங்க் அருகே ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அவர்களிடம் வாசிக்க ஒரு கிறிஸ்தவ பத்திரிகை கேட்டேன். அதை படித்துவிட்டு நான் அந்த விலாசத்திற்கு தொடர்பு கொண்டபோது உடனே THE ONE WAY அனுப்பி வைத்தீர்கள் அதைப் படித்து முடித்ததும் THE CHURCH OF THE BIBLE அனுப்பியிருந்தீர்கள். அதையும் படித்து முடித்து இன்று அனுப்பி உள்ளேன் . இதுவரை சபையைக் குறித்து தாங்கள் விளக்கி எழுதியுள்ளபடி வார்த்தைகளை நான் வேறு எங்கும் வாசித்தது கிடையாது. கேள்விப்பட்டதும் கிடையாது நான் சபையைக் குறித்து மிக தெளிவாக புரிந்து கொண்டேன். இந்த செய்தியை ஒரு போதும் மறந்து போக மாட்டேன். ......வேறு புத்தகங்கள் இருக்குமானால் எனக்கு அனுப்பி வையுங்கள் பணம் கொடுத்துப் பெற்றுக் கொள்கிறேன். அதுமட்டுமன்றி நீங்கள் அனுப்பிய புத்தகம் எனக்கு பயன்பட்டது போல மற்றவர்களுக்கும் பயன்பெற வேண்டும் என்ற ஆவலில் நமது புத்தகத்தினை அறிமுகம் செய்கிறேன்......

மிக்க நன்றி – R.ஜெயகுமார்

*கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்*
*(ரோமர்16:16)*

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# திி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
# THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 5 ஜூலை - 2005 கனி - 8


ஆசிரியருரை

## அவர் உன்னை ஆதரிப்பார்
## He Shall Sustain Thee



ஆதரவு இல்லாமல் இன்று அநேகர் அலைமோதுகின்றனர். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது "கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்" *(சங்.55:22)*. பூமியானது எவ்வளவு நிறை உள்ளதாக இருக்கிறது! அதையே கர்த்தர் அந்தரத்தில் தொங்கவைத்திருக்கிறார். உங்கள் பாரம் அவர் முன் எம்மாத்திரம். உங்கள் பாரம் எப்பேர்பட்டவையாக இருந்தாலும் சரி அதைக் குறித்து நீங்கள் கலங்கத்தேவையில்லை அதை முதலாவது அவர் மேல் வைத்துவிடுங்கள். எப்படி அவர்மேல் வைப்பது என்றுதானே யோசிக்கிறீர்கள். உலகத்தின் பாவத்தையே சுமர்ந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்து "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" *(மத்.11:28)* என்று அழைக்கிறார். நீங்கள் ஏன் வருத்தப்படவேண்டும்? அவரிடம் உங்களை முழுமையாக ஒப்புக்கொடுங்கள் உங்களுடைய பாரத்தை எல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள் அவர் உங்களுக்கு மெய்யான இளைப்பாறுதலைத்தருவார்.

அநேக வேளைகளில் நம்முடைய மனபாரத்தை யாரிடமாவது சொன்னால் மனக்கவலை நீங்கும் என்று

நினைத்து அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் சொல்ல ஆரம்பிப்போம் அல்லது நண்பர்கள் உறவினர்களிடம் சொல்லுவோம். இதனால் நம்முடைய மனபாரம் நம்மைவிட்டு நீங்கிவிடுகிறதா? மேலும் அதிகரிக்கவே செய்கிறது. இதற்கு என்ன காரணம்? நாம் யாரிடம் சொன்னோமோ அவர்கள் அதை திரித்து ஒன்றுக்கு இரண்டாக சொல்லி நமக்கு வேதனையை அதிகப்படுத்துவார்கள். ஏனென்றால் அவர்களும் நம்மைப்போல மனிதர்கள், அவர்களுக்கும் மாம்சத்தில் நம்மைப்போல பாடுகளும் வேதனைகளும் உண்டு. ஆகையால் அவர்களால் நம்முடைய பாரத்தை நீக்கிவிடமுடியாது. நாம் வேண்டுமானால் நினைத்துக் கொள்ளலாம் அந்த மனிதனிடம் சொன்னதால் எனக்கு சற்று மனபாரம் குறைந்திருக்கிறது என்று. உண்மை அதுவல்ல நம்முடைய பாரத்தை ஏற்றுக்கொள்கிறவராகிய கர்த்தரிடம் வைத்துவிடும்போது மெய்யான இளைப்பாறுதலைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

ஒரு முறை வயதான விவசாயி ஒருவர் தன்னுடைய நிலத்தில் விளைந்த உருளைக்கிழங்குகளை ஒரு சாக்கில் போட்டு தன் தலையின் மேல் வைத்துக்கொண்டு சந்தையை நோக்கி தார்சாலை வழியாக நடக்க ஆரம்பித்தாராம். அவ்வழியே சென்ற டெம்போ டிரைவர் வயதான அவரைப்பார்த்து ஐயா நாங்களும் சந்தைக்குத்தான் போகின்றோம் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொள்ளுங்கள் உங்களை அங்கே இறக்கிவிடுகின்றோம் என்றாராம். அவரும் சந்தோஷமாக வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார். ஆனால் அவர் தன்னுடைய சாக்குமூட்டையை தலையிலிருந்து இறக்கவில்லை அதைப்பார்த்த டிரைவர் ஐயா தாங்கள் கஷ்டப்பட்டு சுமந்துவருவதைப் பார்த்துதான் உங்களை ஏற்றிக்கொண்டோம் இன்னும் ஏன் சுமையை சுமந்து கொண்டு உட்கார்ந்து உள்ளீர்கள் என்று கேட்டாராம். அதற்கு அவர் ஐயா எனக்கு இடம் கொடுத்ததே பெரிய காரியம், மூட்டையை வேறு ஏன் வண்டி சுமக்க வேண்டும் அதை நானே சுமந்து கொள்கிறேன் என்றாராம். இன்று அநேகர் இப்படித்தான் கர்த்தரிடம் வந்தும் தங்களுடைய பாரத்தை கர்த்தரிடம் கொடுக்காமல் தாங்களே சுமந்து கொண்டு உள்ளார்கள்.

காடுகளில் விறகு பொறுக்கிக்கொண்டு வருகிறவர்களை பார்த்திருப்பீர்கள். அவர்கள் அதை ஒரேகட்டாக கட்டி தலைச்சுமையாக சுமந்துகொண்டு பல மைல் நடந்துவருவார்கள்.

சற்றே இளைப்பாறும்படி மரத்தண்டை ஒதுங்குவார்கள். அப்பொழுது அவர்கள் ஞானமாக தங்கள் தலையில் உள்ள விறகு கட்டை அந்த மரத்தின் மீது சாய்த்துவைப்பார்கள். அந்த மரம் இவர்களுக்கு இளைப்பாறுதல் தந்து அவர்களுடைய சுமையையும் தானே தாங்கி நிற்கும். அதைப்போல கர்த்தர் முழுபாரத்தையும் ஏற்றுக்கொண்டு இளைப்பாறுதலையும் கொடுக்கிறார். மனபாரத்தினாலும், மனவேதனையினாலும், மனக்கவலையினாலும் மரிக்கிறவர்கள் அநேகர். மனிதன் கவலைப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. ஆனால் ஒன்றுமே இல்லாத காரியத்தை நினைத்து கவலைகொள்கின்றான். "என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறது மில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்" *(மத்.6:25-31).*

மனிதன் தேவ சாயலில் உண்டாக்கப்பட்டுள்ளான். உலகத்தில் எத்தனையோ விதமான மரங்கள், செடிகள், கொடிகள், மிருகங்கள், கடல்வாழ் ஜந்துக்கள், ஆகாயத்துப் பறவைகள் இருந்தபோதிலும், மனிதன் இவைகளைப்

பார்க்கிலும் விசேஷமாகப் படைக்கப்பட்டுள்ளான். அண்டசராசரங்களை போஷிக்கும் கர்த்தர் தம்மால் விசேஷமாக உண்டாக்கப்பட்ட மனுஷனை போஷிக்காமல் விட்டுவிடுவாரா? ஆகையால் கவலைப்படாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். பவுலும் கூட பிலிப்பிய சபைக்கு எழுதும்போது: "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலி.4:6,7). மனிதர்களிடம் உங்களுடைய மனபாரங்களை சொல்லுவதைவிட கர்த்ரிடம் உங்களுடைய பாரங்களைச் சொல்லி ஜெபியுங்கள் அப்பொழுது தேவ சமாதானம் உங்களைக் காத்துக்கொள்ளும். அவர் உங்களுக்கு ஆதரவாயிருப்பார்.

இயேசு ஒரு முறை நாயீன் என்னும் ஊருக்குப் போகும்போது அந்த ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படிகொண்டு வந்தார்கள்: அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்: ஊராரில் வெகு ஜனங்கள் அவளுனேகூட வந்தார்கள் "கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி, கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்" (லூக்.7:13-15). இந்த விதவை ஒரே மகனை இழந்து ஆதரவற்ற சூழ்நிலைக்கு தள்ளப்பட்டாள். அவளுடைய மனது எவ்வளவு வேதனைப்பட்டு இருக்கும்! இனி எனக்கு யாருமே இல்லையே என்ற ஏக்கத்துடன் அழுதுகொண்டு பாடைக்கு பின்னாலே சென்றாள். இவளுடைய கண்ணீரை கர்த்தர் கண்டு மனதுருகி அவனை உயிரோடு எழுப்பி அவனுடைய தாயினிடத்தில் ஒப்புவித்தார். கர்த்தர் வெறும் வார்த்தையினாலே மட்டுமல்ல, உண்மையிலேயே அவர் உன்னை ஆதரிப்பவர். மனிதன் கவலைப்படாதே என்றுதான் சொல்ல முடியும். ஆனால்

அவனால் கவலையைத் தீர்த்து வைக்கமுடியாது. அதேவேளையில் கர்த்தர் அழாதே என்று சொல்லி மரித்தவனை உயிரோடு எழுப்பினார். ஆகையால் உங்கள் பிரச்சனை எதுவானாலும் தேவனுக்கு முதலாவது தெரியப்படுத்துங்கள். மனுஷனை நாடாது பவுல் சொல்வதைப்போல தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்.

யோபுவின் வாழ்க்கையில் பயங்கரமான சோதனை வந்தது நாம் எல்லோரும் பலமுறை யோபுவைப்பற்றிய செய்தியை கேள்விப்பட்டுள்ளோம். அவனுடைய நம்பிக்கை எத்தகையது என்று பாருங்கள்: "அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்" (யோபு13:15). இந்த நம்பிக்கை நமக்கு வரும் சோதனைகளிலும் இருக்குமானால் நம்முடைய நடைகள் உறுதிப்படும். "நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார். அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை: கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்" (சங்.37:23,24). யோபுவுக்குச் சோதனை வந்தவுடன் அவனுடைய நண்பர்கள் உன் பாவம் பெரிது, நீ அழியப்போகிறீர் என்று சொல்லி அவனுடைய மனதை வருத்தப்படுத்தினார்கள். இன்றும் அநேக தேவ பிள்ளைகள் இப்படிப்பட்ட ஜனங்களால் அவதூறாகப் பேசப்படுகின்றனர். இவன் என்ன பாவம் செய்தானோ ஆதலால் இவனுக்கு இந்த தண்டனை என்கின்றனர். பிரியமானவர்களே, நீதிமான்களுக்கு அநேக சோதனைகள் வரும் ஆனால் "நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்" (நீதி.24:16) என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

நாம் முன்னே சங்கீதம்55:22-ல் வாசித்ததுபோல நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார். யோபுவை கரம்பிடித்து தூக்கி இரட்டிப்பான நன்மையால் நிறைத்த கர்த்தர் உங்களையும் ஆசீர்வதிக்க சித்தமுள்ளவராக இருக்கிறார். நீங்கள் உங்களுடைய பாரத்தையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் அவர் உங்களை ஆதரித்து ஒருபோதும் தள்ளாடாது காப்பார். உங்களை அழைத்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள் உங்களுக்கு நேரம்

கிடைக்கும்போதெல்லாம் அவர் மூலமாக தேவனிடம் உங்களுடைய விண்ணப்பங்களை ஏறெடுங்கள். நோய்க்கு மருந்து சாப்பிட்டு நோயிலிருந்து விடுபடலாம். மனநோய்க்கு (மனபாரம்) மருந்து இல்லை. ஆனால் மருத்துவர் இயேசுவிடம் மருந்து உண்டு. என்ன மருந்து என்று கேட்கிறீர்களா? அவருடைய வசனமே அதற்கு ஏற்ற மருந்து, அதை உட்கொள்ளுங்கள். ஏரேமியா அந்தப்படியாக உட்கொண்டதை வாசிக்கின்றோம். "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே; அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருக்கிறது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது" (ஏரே.15:16) என்றான்.

ஆண்டவருடைய வசனங்கள் பாரமானவைகள் அல்ல. "நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" (மத்.11:29,30). உங்களுடைய பாரத்தை அவரிடம் கொடுத்து அவர் கொடுக்கும் சுமையை (வசனத்தை) ஏற்று ஆத்துமாவில் இளைப்பாறுதல் பெறுங்கள்.

## வேத அறிவுப்போட்டி எண் 58 -ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| P. அலிஸ்மேரியம்மாள் | -வத்தலக்குண்டு | P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை |
| S.தண்டபானி | -சிலுவத்தூர் | G.மெர்சிரூபி | -கொடுவாய் |
| S.ஆனந்த ராஜ் | -ஈரோடு | S.ஆனந்தன் | -சித்தூர்(A.P) |
| G.கிரேஸ் ஜெயா | -வெள்ளக்குளம் | S.சேவியர் மேரி | -மதுரை |
| M.சுதாகர் | -ரா.பாளையம் | E.டென்சிங்மனோகர் | -மதுரை |
| R.சாமுவேல் | -ஊதியூர் | G.P.ஏசையன் | -கோபி |
| A.ஆனந்த் | -மதுரை | V.கோவலன் | -மதுரை |
| S.பேபிபுனிதாராணி | -பொ.மங்களம் | J.S.நில்மலர்ஜான் | -மதுரை |


## வேத அறிவுப்போட்டி எண் 58 -ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. யோசுவா | -யோசு.24:27 | 6. பவுல் | -2தெச.3:2 |
| 2. மரணம் | -1கொரி.15:26 | 7. விழப்பண்ணுவேன் | -ஏரே.49:16 |
| 3. கண்டுபிடியான் | -பிர.3:11 | 8. இல்லை | -மத்.10:24 |
| 4. எப்பாப்பிரா | -கொலோ.4:12 | 9. தீரு | -எசே.26:14 |
| 5. நித்திய | -நீதி.15:156. | 10. லோத்து | -2பேது.2:8 |

# கிறிஸ்துவுக்குள்

## IN CHRIST

*J.C.Choate*



வேதாகமம் நாம் பாவமற்றவர்களாக சரீரப்பிரகாரமாகப் பிறந்திருக்கிறோம் என்று போதிக்கிறது. நாம் பரிசுத்தமுள்ளவர்களும், கபடற்றவர்களும், காக்கப்பட்டவர்களுமாக இருக்கிறோம். ஆனால் நாம் வயது வந்தவர்களாக, பொறுப்புடைய வயதை அடைந்திருக்கையில், நல்லது கெட்டதை அறிந்து, இவ்வாறாக பாவிகளாக மாறி (ரோம.3:23), நாம் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கும்படிக்கு இப்போது கட்டாயமாக மனந்திரும்பி சிறு குழந்தைகளைப் போல மாறவேண்டியவர்களாக இருக்கிறோம் (மத்.18:3).

பாவிகளாகிய நாம் இரட்சிக்கப்படவேண்டியது அவசியம் ஏனென்றால் நாம் தேவனுடைய கட்டளையை மீறினவர்களாயிருக்கிறோம் (1யோவா.3:4). பவுல் நமக்கு "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ ...... நித்தியஜீவன்" (ரோம.6:30) என்று நினைப்பூட்டுகின்றான்.

ஆனால் நாம் எப்படி பாவத்திற்கும் மரணத்திற்கும் தப்பித்துக் கொள்ளமுடியும்? நாம் எவ்வாறு மன்னிக்கப்பட்டு, மீட்கப்பட்டு, இரட்சிப்பின் நிலைமைக்குக் மாற்றப்பட முடியும்? நாம் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவோமானால் கிறிஸ்துதாமே நம்மை இரட்சிப்பார் என சொல்கிறார் (மாற்.16:16). பேதுரு திரளான ஜனக்கூட்டத்திற்குப் பிரசங்கித்தபோது, அவர்கள் விசுவாசிகளாகி, தாங்கள் செய்யவேண்டியது என்னவென்று அறிய விரும்பினார்கள். அவன் அவர்களிடத்தில் அவர்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றான் (அப்.2:38). இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டார் (அப்.2:47) என அறிவுறுத்தப்படுகிறோம்.

நம்மை இவ்வுலகத்திலிருந்து விடுவித்து கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் கொண்டு செல்லுகிறது ஞானஸ்நானம். இதுவே நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் கடைசி படியாகும் தேவனிலும், கிறிஸ்துவிலும் விசுவாசத்தின் மூலமும் நமது பாவங்களிலிருந்து மனந்திரும்புவதின் மூலமும், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று நமது விசுவாசத்தினால் அறிக்கையிடுவதின் மூலம் இது நடைபெறவில்லையென்றால் ஞானஸ்நானத்தினால் மட்டும் ஒன்றும் பிரயோஜனமில்லை, நிச்சயமாக, இது நமக்கு ஒன்றும் செய்யாது. அப்புறம் ஞானஸ்நானப்படுத்தப்படுகையில் நம்முடைய பாவங்கள் கழுவப்படும் பொருட்டு தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்பட்டு, கர்த்தருடைய கற்பனைகளை நிறைவேற்று வதுடன் ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது என அறிவுறுத்தப்படுகிறோம் (பேது.3:21). தண்ணீர் தானே நம்மை இரட்சிக்கிறதில்லை ஆனால் நாம் கிறிஸ்துவின் சித்தப்படி ஞானஸ்நானம் பெற்றிருக்கிறபடியால் கிறிஸ்து நம்மை இரட்சிக்கிறார். 1பேதுரு3:21-ல் பேதுரு கூறுகிறபடி ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், அல்லது ஸ்நானம்பண்ணுவதற்காக இல்லாமல் தேவனைப்பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கை யாயிருக்கிறது.

ஒருவன் தேவன், தன்னை செய்யும்படி கேட்டுக்கொண்டதைச் செய்யாமலிருக்கையில் தேவனுக்கு முன்பாக அவன் எவ்வாறு நல் மனசாட்சியினைக் கொண்டவனாயிருக்க முடியும்? என வினா எழும்புகிறது. நிச்சயமாக இது இயலாது, எனவே தான் தன்னுடைய பாவத்திற்காக மனந்திரும்புகின்ற விசுவாசியே ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியமாயிருக்கிறது.

இன்னொரு வழியில் இதை ஆராய்கையில்: ஒருவன் வசனத்தின்படி ஞானஸ்நானம் பெறுகையில் தண்ணீருக்குள் அடக்கம்பண்ணப்பட்டு, புதிய ஜீவியம் ஜீவிக்கும்படி தண்ணீரிலிருந்து வெளியே கொண்டுவரப்படுகிறான் (ரோம.6:3,4) அவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் புதிய பிறப்பினை அனுபவித்து, ஆவியிலே மறுபடியும் பிறந்தவனா யிருக்கிறான் (யோவா.3:3-5). பவுல் இதை "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்;

பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி.5:17) என விளக்குகிறான்.

இரட்சிப்பையும் புதுச்சிருஷ்டியாய் இருப்பதையும் கொண்டிருப்பதற்கு, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும் மேலும் அதுவே கிறிஸ்துவுக்குள் பிரவேசிப்பதற்கு நீதியான ஒரே வழியாய் இருக்கிறது. அப்போஸ்தலன் பவுல், "கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோம.6:3,4) என்றான்.

பவுல், 2கொரிந்தியர்5:17-ல் சொன்னது என்னவென்றால், புதிய சிருஷ்டியாயிருப்பதன் விளைவு புதிய ஜீவியம் ஜீவிப்பது அல்லது **கிறிஸ்துவுக்குள்** புதிய ஜனமாயிருப்பது என்பதாகும். மறுபடியும் அவன், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" (கலா.3:26,27) என்றான்.

உதாரணமாக, ஒருவன் ஒரு சட்டையை அணிகிறபோது, அவன் சட்டைக்குள்ளிருக்கிறானா அல்லது சட்டைக்கு வெளியே இருக்கிறானா? நிச்சயமாக அவன் சட்டைக்குள்தான் இருக்கிறான். அவ்வாறே ஒருவன் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறபோது, அவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறான். வெளியே அல்ல. இதன் இன்னொரு அர்த்தம் ஒருவன் கிறிஸ்துவுக்குள் **தேவனுடைய ஒரு குழந்தையாக இருக்கிறான்,** கிறிஸ்துவுக்கு வெளியே அல்ல.

ஒரு குறிப்பிட்ட நிலையில் ஒரு சமயத்தில் இரட்சிக்கப்பட்டு, பிறகு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம் எனக் கூறுகிறவர்கள் கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது கிறிஸ்து இன்றி இரட்சிக்கப்பட்டவர்களாக இருப்பர். இது எவ்வாறு கூடும்? இரட்சிக்கப்படும்படிக்கு ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும், அது கிறிஸ்துவுக்குள் ஒருவனை

கொண்டுசெல்லும் ஞானஸ்நானம் என வேதவாக்கியங்கள் போதித்தால், ஞானஸ்நானத்திற்கு முன்பாக ஒருவன் இரட்சிக்கப்படுவது என்பது இயலாததாயிருக்கும்.

மீண்டும், பவுல் 1கொரிந்தியர்12:13-ல் ஒரே சரீரத்திற்குள் நாம் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம் என்கிறான், மேலும் கொலோசெயர்1:18-ல் சரீரமே சபை என்கிறான். எபேசியர்1:22,23,-ல் சபை சரீரமாயிருக்கிறது எனக்காட்டுகிறான் மேலும் கடைசியாக எபேசியர்4:4-ல் ஒரே ஒரு சரீரம் எனக்குறிப்பிடுகிறான்.

ஆனால் ஒரே சரீரமே சபையானால் அதன் அர்த்தம் ஒரே சபை மாத்திரமே உண்டு என்பதாகும், மேலும் நாம் அந்த சரீரத்திற்குள்ளாக அல்லது சபைக்குள்ளாக **ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருந்தால்,** பிறகு சபைக்குள் பிரவேசிப்பதற்கு ஒரே வழி மட்டுமே உள்ளது: அது ஞானஸ்நானம் பெற்றிருப்பதன் மூலமே! இது எல்லாம் மிகவும் நியாயமானது!

அனைத்து கருத்துக்களையும் ஒன்றிணைக்கையில், நாம் ஞானஸ்நானத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படிகையில், நாம் கிறிஸ்துவுக்குள் மேலும் அவருடைய சபைக்குள் பிரவேசிக்கிறோம், ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கின்ற அதே வேளையில் கிறிஸ்து நம்மை தம்முடைய சபையில் சேர்க்கிறார்.

சரீரப்பிரகாரமான உறவில், அதாவது, ஒரு முறை சரீரப்பிரகாரமான ஒரு குடும்பத்தில் நாம் பிறந்திருக்கையில், **நாம் அதில் பிறவாதவர்கள் போல் இருக்கமுடியாது**. நாம் நமது குடும்பத்தின் விசுவாசமிகுந்தவராகவும், வேலையில் கருத்துள்ள அங்கத்தினனாகவும் அதனுடைய பலன்களைப் பெறுகிற்வர்களாக அல்லது ஒருவேளை நாம் வாரிசுரிமையை இழக்கின்ற வழியில் வாழ்கிறவர்களாயிருக்கலாம். ஆனால் நாம் எப்போதும் நம்முடைய தகப்பனுக்கும் தாயுக்கும் மகன் அல்லது மகளாக இருப்போம்.

இதே தான் உண்மையான ஆவிக்குரிய ரீதியிலுமுள்ளது. ஒரு முறை நாம் கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபை அல்லது குடும்பத்திற்குள் பிரவேசித்து, எப்போதும் நாம் கிறிஸ்துவுக்குள்ளிருப்போம், மேலும் நாம் எப்போதும் அந்த குடும்பத்தினுடைய அங்கத்தினர்களாக இருப்போம் ஆனால், நாம் விசுவாசமுள்ளவர்களாகவோ விசுவாசமில்லாதவர் களாகவோ இருக்க இயலும். ஆனால் தேவனுடைய பிள்ளையாக

இருந்து, மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்கையில், கர்த்தர் நமக்கு ஜீவகிரீடத்தைக் கொடுப்பதாக வாக்களித் திருக்கிறார் (வெளி.2:10).

நாம் விசுவாசமற்றவர்களாயிருந்தோமானால் குடும்ப பிராந்திய சபையின் மூலம் இவ்வுலகில் ஒருவேளை நட்புறவு கொள்ளாதவர்களாக இருந்து விட நேரிடும். கடைசியாக நாம் மனந்திரும்பாவிட்டால் நித்திய நித்தியமாக இழந்தவர்களாகி விடுவோம் (மத்.25:46). நாம் நம்முடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கர்த்தரிடத்தில் திரும்புவோமானால், கர்த்தருக்குச் சொந்தமானவர்களுக்கு வரக்கூடிய பலன்களை மீண்டும் பெறுவோம். இந்த ஆவிக்குரிய குடும்ப உறவினை நன்றாகப் புரிந்து கொள்ளும்படிக்கு மனந்திரும்பிய மைந்தனின் கதையை லூக்கா 15-ல் வாசித்துப் பாருங்கள்.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? நீங்கள் அவருடைய சபை அங்கத்தினராயிருக்கிறீர்களா? நீங்கள் தேவனுடைய விசுவாசமிக்க பிள்ளையாயிருக்கிறீர்களா? இல்லையென்றால், இது துக்ககரமான உண்மை, நீங்கள் இழந்துபோன நிலைமையிலிருக்கிறீர்கள். தயவுசெய்து அதிக தாமதம் ஏற்படும் முன் கர்த்தரிடம் வந்து சேரும்படி அவருடைய அழைப்பிற்குச் செவிசாயுங்கள்.


**நீங்கள் தேனி மாவட்டத்திலிருந்தால் தேனியில் உள்ள சபையில் கலந்து கொண்டு தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதியுங்கள்**



உங்களை அன்புடன் வரவேற்கும் சபை ஊழியர்
மற்றும் சபையார்கள்.
**M.**செல்வராஜ், கிறிஸ்துவின் ஊழியர்
**கிறிஸ்துவின் சபை**
ஒண்டிவீரன் நகர்
அரசு மேல் நிலைப்பள்ளி பின்புறம்
அல்லி நகரம், தேனி -625 531
தேனி மாவட்டம்,
தமிழ் நாடு, இந்தியா.

# அங்கே ஓர் ராஜ்யம்

## There is a Kingdom

என் சிநேகிதியே, அங்கே ஓர் ராஜ்யம்
பகல் அல்லது இரவு
காணப்படாத இடம் அது
இடைவெளி தூரங்கள்
அளவிடப்படாத இடம் அது
உணர்ச்சிகளின் மையமாகிய எந்த இருதயமும் தனியாக நடக்க முடியாத
கண்ணீரால் இன்னொருவரின் கண்களை நிரப்புகிற
உனது துயரத்தின்
பாரம் நிறைந்த இடது அது
உனது சிரிப்பின் எதிரொலி
உதடுகளிலிருந்து வடிகிறது என்றென்றும் பிரியமே;
பிதாவினிடத்திற்கு
நீ தைரியமாய் கொண்டு செல்லும் ஒவ்வொரு கனவும்
வளர்கிறது இன்னொருவரின் இருதயத்திற்குள்
அந்த கரங்கள் பலத்துடன்
உதவுகிறது உனக்கு
தூரத்தில் இலக்குகளை நீ அடைவதைப் போல்;
வெற்றி அல்லது அழிவு இல்லா இடம் அது
காலத்தினால் நாசம் உருவாக்கப்படாத இடம் அது,
வறுமை அல்லது செல்வம்
அன்பின் மேன்மையை பாதிக்க முடியவில்லை
ஒருவர் மிகக் கெம்பீரமாக
சிந்தையில் வைத்துள்ள இடம் அது
ஆண்டுகள் அதிவேகமாய் பறக்கையில்
ஆழமான அழகுடன் தகதகவென பிரகாசிக்கிறது
இளமை முழுதும் கடந்து போகையில்
மலையின் மேலே இருக்கும்
இரு இருதயங்கள்
வரப்போகும் முடிவினை ஆராயலாம்
பிரியமே, அங்கே ஓர் ராஜ்யம்
ஒரு சிநேகிதியின் இருதயதுடிப்பினுள்.

-Betty Burton Choate

# வேதாகம ஆலோசனை

*"இவைகள் பேதைகளுக்கு வினாவையும்,*
*வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும்.*
*புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்;*
*விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும்,*
*அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும்,*
*அவர்கள் உரைத்த புதை பொருள்களையும்*
*அறிந்துகொள்வான்"(நீதி.1:4-6)*

**வேதாகம ஆராய்ச்சி பாடம்-1**

5.வேதாகமம் தேவஆவியினால் கொடுக்கப்பட்ட ஒன்றா?

ஆம், வேதாகமம் தேவஆவியினால் கொடுக்கப்பட்ட ஒன்றுதான். "வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2தீமோ.3:16,17).

தேவன் தம்முடைய தாசர்களைக் கொண்டு வேதாகமத்தை எழுதினார். அவர்கள் சுயஞானத்தோடு இதை எழுதவில்லை. தேவ ஆவியின் ஏவுதலினால் இதை எழுதினார்கள். அப்போஸ்தலனாகி யோவானும் கூட நாடுகடத்தப்பட்ட சூழ்நிலையில் பத்மு எனப்பட்ட தீவிலே வெளிப்படுத்தின புத்தகத்தை எழுதினான்.

வேதாகமத்தில் உள்ள ஒற்றுமை என்னவென்றால் ஒரே காரியத்தை பல தேவ தாசர்கள் பல்வேறுசமயங்களில் பல்வேறு இடங்களில் இருந்து எழுதியிருக்கிறார்கள். ஆகையால் தான் இது தேவஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டுள்ளது என அறிகிறோம். மனிதனுடைய புத்திக்கு எட்டாத அநேக காரியங்கள் வேதாகமத்தில் அடங்கியுள்ளது. உதாரணமாக பூமி உருண்டை என்பதை நவநாகரிக உலகத்தில் இப்போதுதான் மனிதன் கண்டுபிடித்தான் ஒன்று. ஆனால் வேதாகமம் "அவர் பூமி உண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்" (ஏசா.40:22). மேலும் "அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்" (யோபு26:7) என்று ஏற்கனவே கூறியுள்ளது.

இப்படிப்பட்ட அநேக வேதாகம சான்றுகள் இருப்பதால், வேதாகமம் தேவ ஆவியின் ஏவுதலால் ஏவப்பட்டு எழுதப்பட்ட ஒன்றுஎன்கிறோம். அவைகளை நாம் வாசித்து தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவும் நாம் சீர்ப்படவும் அவைகள் பிரயோஜனமுள்ளவைகளாகயிருக்கிறது.

பெண்கள் பகுதி

# எதைப் பார்க்கப் போகிறீர்கள்?

## What Go Ye Out For To See?

*J.Glory Arjunan*



இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் கொண்டுள்ள அன்பு சகோதரிகளே, நீங்கள் எதைப்பார்க்கப் போகிறீர்கள்? ஆவிக்குரிய கூட்டங்களுக்கும் சபைக்கும் போகிறீர்களே, அங்கே எதைப்பார்க்கப் போகிறீர்கள்? இயேசு யோவானைக் குறித்து ஜனங்களுக்குச் சொன்னபோது, இதே கேள்வியைத் தான் கேட்டார்.

எதைப்பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ? (லூக்7:24) என்றார். நாணல் காற்றில் அசையும் காட்சி கண்ணுக்கு விருந்தாக, பார்வைக்கு இன்பமாக இருக்கும். அது காற்றில் உராயும் போது ஏற்படுத்துகின்ற ஓசையோ செவிக்கு இனிமையாக இருக்கும். ஆம், இன்று நீங்கள் சபைக்கும் ஆவிக்குரிய கூட்டங்களுக்கும் போகிறீர்களே, அங்கு எதைப் பார்க்கப் போகிறீர்கள்? எங்கள் பார்வைக்கு இன்பமாக இருக்கிறது, ஜனக்கூட்டத்தைப் பார்க்கப் பார்க்க தெவிட்டாததாயிருக்கிறது. அங்கு இசைக்கிற இசையோ உலகத்தையே மறக்கச் செய்கிறது என்கிறீர்களா? ஏமாந்து போகாதீர்கள். ஏவாள் இவ்வாறே, ....அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், **பார்வைக்கு இன்பமும்** என்று கண்டு அந்த கனியைப் பறித்து புசித்து உலகத்திற்கே பாவத்தைக் கொண்டு வந்தாள் (ஆதி.3:6). கண்களின் இச்சை உலகத்தினால் உண்டானது என்று 1யோவான்2:16 கூறுகிறது. இன்று அநேக கிறிஸ்தவ சகோதரிகள் வெளித்தோற்றத்தைப் பார்த்து திருப்தியடைந்தவர்களாயிருக்கின்றனர். இசைக்கருவியின் இசையோடில்லாத கீதங்கள் இவர்களுக்குப் பிடிப்பதில்லை.' ' வேதம், "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் உங்கள் **இருதயத்தில்** கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம் பண்ணி" (எபே.5:19) என்று தானே சொல்லுகிறது. இதை மறந்துபோனீர்களா?.

இங்கே மேலும் இயேசு கிறிஸ்து; "அல்லவென்றால் எதைப்பார்க்கப் போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? அலங்கார வஸ்திரந்தரித்துச் செல்வமாய் வாழ்கிறவர்கள் அரசர் மாளிகைகளிலே இருக்கிறார்கள்" (லூக்.7:25) என்கிறார். நாங்கள் பார்வைக்கு இன்பமும் அழகுமானவற்றைப் பார்க்கப் போகவில்லை என்கிறீர்களா? அல்லவென்றால் எதைப் பார்க்கப் போனீர்கள்? வித்தியாசமான வஸ்திரந்தரித்திருக்கிறார் அந்த ஊழியக்காரர், அவரைப் பார்த்தாலே பக்தி பரவசம் ஏற்படுகிறது, நீண்ட அங்கிதரித்து ஒரு போதகரைப்போல அல்லது கோட் சூட் என அணிந்து ஒரு செல்வந்தனைப் போல கெம்பீரத்தோற்றத்துடன் இருக்கிறார். ஆனபடியினால் இப்போர்பட்ட தோற்றத்துடனிருக்கிற கூட்டங்களுக்கும், சபைகளுக்கும் தான் செல்லுவோம். பார்வைக்கு பரதேசியைப் போலுள்ள ஆவிக்குரிய கூட்டத்திற்கும் சபைக்கும் செல்ல மாட்டோம் என்கிறீர்களா?

ஒரு முறை நாங்கள் சத்தியத்தை சத்தியமாகப் பகுத்துப் போதிக்கும்படி ஒரு பெரிய நகரத்திற்குச் சென்றிருந்தோம். அப்போது ஒரு சகோதரன் எங்களைப் பார்த்து கூறினார், "சகோதரனே, நீங்கள் இப்படி எளிமையான தோற்றத்துடனிருந்தால் உங்கள் வார்த்தைக்கு இங்குள்ள ஜனங்கள் அதிகமாக செவிசாய்க்க மாட்டார்கள். நன்றாக Coat,Suit அணிந்து இருந்தால் தான் செவிசாய்ப்பார்கள்" என்றார். அது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது இதனால் தான் அன்றே இயேசு இந்த கேள்வி கேட்டிருக்கிறார் என் நினைக்கிறேன். ஆம், இன்று விசுவாசமுள்ள சகோதரிகள் என அழைக்கப்படுகிறவர்கள் கூட இவ்விதமான தவறான எண்ணங்கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். எனவே தான் எளிமையாய் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுகிறவர்கள் கூடுமிடத்திற்குச் செல்லாமல் அலங்கார வஸ்திரந்தரித்து, நகைகளை அதிகமாய் அணிந்து மினுக்குடன் வந்து நாங்களும் தேவனைத் தொழுது கொள்ளுகிறோம் என்று கூறிக்கொள்ளுகிறவர்கள் கூடுமிடத்திற்குப் போகிறீர்களா? அல்லது அந்த சபைக்கட்டிடம் பெரியதாக ஒரு கோவிலைப் போல காட்சியளிக்கிறது, அந்த சபைக்குக் கல்லறை இருக்கிறது என்று போகிறீர்களா? அன்பு சகோதரிகளே, இவையெல்லாம் ஒரு நாளில் அழிந்துபோம். நீங்களே தேவனுடைய ஆலயம் என்பதை மறவாதீர் (1கொரி.3:4). எருசலேம் தேவாலயமே இடிந்து

போய்விட்டது. எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளும் காலம் வந்துவிட்டது (யோவா.4:23). இல்லை இப்படியெல்லாம் நாங்கள் அலங்காரத்தையோ, கட்டடத்தையோ, கல்லறையையோ பார்த்துப் போகவில்லை என்கிறீர்களா?

"அல்லவென்றால், எதைப் பார்க்கப் போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம் தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ...ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை..." (லூக்7:26-28). இயேசு கிறிஸ்துவே யோவானைக் குறித்து இவ்வளவு அழகாய் சாட்சி கொடுக்கிறார்!. ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை. இப்படியிருக்க, நீங்கள் எதைப்பார்க்கப் போகிறீர்கள்? அந்த ஊழியர் சொன்னால் அப்படியே நடக்கிறது. தீர்க்கதரிசனம் நன்றாய் உரைக்கிறார். பில்லி சூனிய கட்டுகளெல்லாம் உடைந்து போகிறது என்று சொல்லி அஞ்ஞானிகள் குறிகேட்கப் போகிறது போல போகிறீர்களா? அன்பு சகோதரிகளே, ஸ்திரீகளிடத்தில் பிறந்த இந்த பெரிய தீர்க்கதரிசி யோவானைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவர் நம்மோடிருக்கிறார். யோவானே இயேசுவைக் குறித்து, "..... என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர் தான் (யோவா.1:29) என்றான்.

மேலும் இயேசு, "யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள்; இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்;" (லூக்.11:32) என்று தம்மைக் குறித்து கூறுகிறார். எல்லாரிலும் பெரியவராகிய இயேசு கிறிஸ்து இம்மானுவேலனாக, நம்மோடிருக்கிறவராக இருக்கும்போது பெரிய பெரிய பிரசங்கியார்களை நோக்கி குறிகேட்கப்போகிறது போல போகிறது ஏன்? 'என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுகிறதில்லை" என்று இயேசு கூறுகிறார். பிதாவினிடத்தில் நமக்காகப் பரிந்து பேசுகிறவரும் அவரே. அவரை நோக்கிச் செல்வோம், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம். நாமே இயேசுவின் மூலமாய் தேவனிடத்திற்குச் செல்லும் சிலாக்கியம் பெறும்படி அவரை விசுவாசித்து, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று தேவனுடைய ராஜ்யத்தில் பிறப்போம். 'ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில்

பிரவேசிக்கமாட்டான்..." (யோவா.3:5) என்று இயேசு கூறுகிறார். மேலும் "தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் (யோவானிலும்) பெரியவனாயிருக்கிறனென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்.7:28). ஆனபடியினால் ஞானஸ்நானத்தின் மூலம் இயேசுவின் இரத்ததால் கழுவப்பட்டு தேவனுடைய ராஜ்யத்தில் பிறந்து தேவனுடைய பிள்ளையாக இருக்க வேண்டிய நீங்கள் இன்னும் எதைப் பார்க்கப் போகிறீர்கள். சிந்தியுங்கள். இன்னும் உலகத்தாரைப் போல எதை எதையோ பார்க்கப் போகாதிருங்கள். சத்தியபரராகிய கர்த்தரை நோக்கிச் செல்லுங்கள். சத்தியத்தை சத்தியமாய் போதிக்கும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை நோக்கிப் போங்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும். தேவன் தாமே தெளிந்த புத்தியையும் ஞானத்தையும் அருள்வாராக!

## பேசும் வேதாகமம்

1. மரித்தவன் எதற்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறான்? - பாவத்துக்கு - ரோமர்6:7.
2. சிலுவையின் உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு எப்படி இருக்கிறது? - பைத்தியமாயிருக்கிறது - 1கொரி.1:18.
3. நல்விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது நல்லதா? - நல்லதுதான் - கலா.4:18.
4. நீங்கள் கோபங்கொண்டாலும் என்னசெய்யாதிருங்கள்? - பாவஞ்செய்யாதிருங்கள் - எபே.4:26.
5. அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் எது நிறைவேறப் பிரயாசப்படுங்கள்? - உங்கள் இரட்சிப்பு - பிலி.2:12.
6. கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் என்ன செய்யுங்கள்? - மன்னியுங்கள் - கொலோ.3:13.
7. உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் என்ன செய்ய நாடுங்கள்? - நன்மைசெய்ய - 1தெச.5:15.
8. வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது எதைக் கைக்கொள்ளுங்கள்? - நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளை - 2தெச.2:15.
9. தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே எப்படிப்பட்ட மேன்மையுள்ளது? - மகாமேன்மையுள்ளது - 1தீமோ.3:16.
10. நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் எப்படியிரு? - நிலைத்திரு - 2தீமோ.3:14.

வாலிபர் பகுதி

# இயேசுவைப் பின்பற்றுங்கள்

*P.Balakrishnan*



கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதர சகோதரிகளுக்கு மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினால் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதிலே மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

தேவனுடைய படைப்பிலே நாம் விசேஷித்தவர்களாக படைக்கப்பட்டிருக்கிறோம். நாம் காண்கிற இந்த உலகத்திலே தேவன் எல்லா படைப்பையும் நேர்த்தியாக செய்திருக்கிறார். எல்லாம் தன் சுய இஷ்டப்படி போகாமல் தேவன் பண்ணுவித்தவிதமாகவே செயல்படுகிறது. நாம் வானத்தில் காணப்படுகிற நட்சத்திரங்களையும், கிரகங்களையும், பார்க்கும் போது அந்தரத்திலே தேவன் படைத்த வழியைப் பின்பற்றிச் செல்கிறது. இந்த பூமியும் அவ்வாறே சுற்றி வருகிறது. குயவன் தான் பண்ணுவித்த பானையை கைகளினால் எவ்வாறு வடிவமைக்கிறானோ அவ்வாறே மண்ணானது இசைந்து கொடுக்கிறது. மனுஷர் நாம் தேவனைப் பின்பற்றி செல்கிறார்களா என்று பார்த்தால் அவரவர் தம் தம் சுய இஷ்டப்படி வாழ்ந்து தேவ வழியை விட்டு மனுஷனுடைய கற்பனைகளையும், கட்டுக்கதைகளையும் பின்பற்றி தேவனுடைய பார்வைக்கு வெகு தூரமாய் மரணத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறதை நாம் பார்க்கிறோம். உலகத்தார் கூறும் போது கூட தாயைப் போல பிள்ளை, நூலைப்போல சேலை என்று கூறும் பழமொழி உண்டு. தன் குழந்தை யாரைப் பின்பற்றுகிறதோ அவர்களுடைய பெயரைச் சொல்லி அக்குழந்தையை அழைப்பார்கள். தேவ படைப்பிலே படைக்கப்பட்ட நாம் தேவனை பின்பற்றுகிறோமா? என்று பார்க்க வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. இன்றைய நவீன காலத்திலே யாரை முதலில் பின்பற்ற வேண்டும் என்று தெரியாமல் வாலிப சகோதர சகோதரிகள் மனம் போன போக்கிலே போய்க்கொண்டு இருக்கின்றனர். ஆகையால் நாம் முதலில் யாரைப் பின்பற்ற வேண்டும்? யாரைப் பின்பற்றக் கூடாது? என்று வேதம் நமக்கு போதிக்கிறது என்று பார்ப்போம்.

**நாம் யாரை பின்பற்றக் கூடாது?**

முதலாவது, **தீமையைப் பின்பற்றக் கூடாது:** (யாத்23:2) தீமை செய்ய திரளான பேரை பின் பற்றாதிருப்பாயாக என்று வேதம் சொல்கிறது இன்றைய நாளிலே பார்க்கும் போது அநேக வாலிப

சகோதர சகோதரிகள் தீமைக்கு துணைநின்று கூச்சலிட்டுக்கொண்டு கலவரங்களிலும், சண்டைகளிலும், ஈடுபடுவதை நாம் கண் கூடாக பார்க்க முடிகிறது. ஆகையால் எனக்கு அன்பான வாலிப சகோதரனே சகோதரியே நாம் தீமை செய்ய திரளான பேரை பின்பற்றாமல் இயேசு கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றும் சகோதர சகோதரிகளோடே சேர்ந்து தேவன் நமக்கு போதித்த வேத வார்த்தைகளைப் பின்பற்றுவோம்.

***அடுத்ததாக அந்நிய தேவர்களை பின்பற்றக் கூடாது?***

*எரே.16:11,12* உங்கள் பிதாக்கள் என்னை விட்டு (தேவனை விட்டு) அந்நிய தேவர்களைப் பின்பற்றி அவர்களை சேவித்து (வணங்கி) அவர்களைப் பணிந்து கொண்டு, என் நியாயப்பிரமாணத்தை கைக் கொள்ளாமல் என்னை விட்டுவிட்டார்களே! என்று வேதம் கூறுகிறது. உண்மையான தேவனை விட்டு விட்டு ஊமையான விக்கிரகங்களை நாடிச்செல்லும் எத்தனையோ சகோதர சகோதரிகளைப் பார்க்கிறோம். அப்படிச் சென்றதினாலே தேவனுடைய அரிய பொக்கிஷமாகிய ஆசீர்வாதத்தை இழக்கிறார்கள். இப்படிப்பட்ட சமுதாயத்திலிருந்து விலகி தெளிந்தவர்களாயிருப்போம். மனுஷருடைய கற்பனைகளும் கட்டுக்கதைகளும் தலைவிரித்து ஆடிக் கொண்டிருக்கிறதை நாம் அனுதினமும் காண்கிறோம். ஆகையால் அழிந்து போகிற அந்த மனுஷருடைய போதனைகளையும் அந்நிய தேவர்களையும் சேவிக்க கூடாது என்று வேதம் நமக்கு போதிக்கிறது. எடுத்துக்காட்டாக, தானியேல் புஸ்தகத்திலே மூன்று வாலிப சகோதரர்களைக் குறித்து நமக்கு வேதம் போதிக்கிறது (தானி.3:1-29). சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ, என்கிற வாலிப சகோதரர்கள் நேபுகாத் நேச்சார் பண்ணுவித்த சிலையை வணங்காமல் ராஜாவினுடைய கட்டளைக்கு எதிர்த்து நின்றதினாலே அந்த நாட்டில் உள்ள அனைத்து ஜனங்களும் ராஜா உட்பட அனைவரும் ஜீவனுள்ள தேவனை தொழுது கொண்டதையும் அவர்கள் ராஜாவினுடைய ராஜ்யபாரத்திலே விசேஷித்தவர்களாய் உயர்த்தப்பட்டதையும், தேவனுடைய மகிமையையும் நாம் வேதத்தில் காண்கிறோம்.

அதைப்போல (1இராஜா.18:21-38) எலியா தீர்க்கதரிசி பாகாலை வணங்கும் கூட்டத்தாரை நோக்கி: தேவ வைராக்கியத்தோடே (1இராஜா.18:21) கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள் பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்று எதிர்த்து நின்று வெற்றி பெற்றதையும், தேவனுடைய அதிசயத்தை நிகழ்த்துவதையும் அங்கு கூடியிருந்த அனைவரும் கண்டு பாகாலை பின்பற்றுவதை விட்டு விட்டு கர்த்தரைப் பின்பற்றினார்கள் என வேதத்தில் வாசிக்கின்றோம்.

*நாம் யாரைப் பின்பற்றவேண்டும்?*

முதலாவது கிறிஸ்துவைப் பின் பற்றவேண்டும்: தேவ குமாரனாகிய கிறிஸ்து கூறும்போது (மத்.16:24) தன் சிலுவையை (பாடுகள்) எடுத்துக்கொண்டு தம்மைப் பின்பற்ற வேண்டும் என்று கூறுகிறார். நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று கூறுகிறார் (யோவா.14:6).

இயேசு கலிலேயா கடலோரமாய் போதித்துக் கொண்டுபோகும் போது, பேதுருவையும், அவனுடைய சகோதரனாகிய அந்திரேயாவையும் பார்த்து என்பின்னே வாருங்கள் மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குகிறேன் (மத்.4:19,20) என்று அழைக்கும் போது வலைகளை விட்டு விட்டு அவர் பின் சென்றார்கள். இதே போல் வரி வசூலிப்பவனாகிய மத்தேயுவை அழைக்கும் போது (மத்9:9) தன் வேலையை விட்டு விட்டு இயேசுவின் பின்னே சென்றான். ஏனென்றால் அவரை பின்பற்றாதவன் அவருக்கு ஏற்ற பாத்திரனல்ல என்று இயேசு (மத்.10:38) -ல் கூறுகிறார்.

அடுத்ததாக நீதியைப் பின்பற்ற வேண்டும்.

சாலொமோன் ஞானி கூறும்போது (நீதி.15:9) நீதியை பின்பற்ற வேண்டும் என்று கூறுகின்றான். (ஏசா.51:1 நீதியைப் பின்பற்றி கர்த்தரைத் தேடு என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறுகின்றான். (1கொரி.11:1) நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவது போல நீங்களும் என்னை பின்பற்றுங்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றான். ஆகையால் எனக்கு அன்பான சகோதர சகோதரிகளே நாம் யாரைப் பின்பற்றுகிறோம் என்று சிந்தித்துப் பாருங்கள். மாயையைப் பின்பற்றாமல், நேற்றும் இன்றும் என்றும் மாறாத கர்த்தராகிய இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி சாட்சியுள்ள பிள்ளைகளாக மாறுவோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**தேவனுடைய வசனம்**

| | |
|---|---|
| குறைவற்றது | –சங்.19:7 |
| ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது | –சங்.19:7 |
| பேதையை ஞானியாக்குகிறது | –சங்.19:7 |
| இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறது | –சங்.19:8 |
| கண்களைத் தெளிவாக்குகிறது | –சங்.19:8 |

*–P.அலிஸ்மேரியம்மாள்*

# சந்திப்போம்! சிந்திப்போம்!

**உரையாடல் - 34**

D.எபிநேசர்

**யோனத்தான்:** தொழுகையில் பாடல்கள், ஜெபம் பற்றியெல்லாம் நிறைய தெரிஞ்சுக்கிட்டேன். அடுத்ததாக சபையில் பிரசங்கிப்பது பற்றி சில கேள்விகளைக் கேட்கலாமா தாவீது?

**தாவீது:** தாராளமாகக் கேட்கலாம். அதுபற்றிக்கூட நிறைய குழப்பங்கள் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சபைகளில் இருக்கு. உன்னுடைய கேள்விகள் அவர்களைத் தெளிவாக்கட்டும் யோனத்தான்!

**யோனத்தான்:** பிரசங்கத்திற்கென்று ஏதாவது அளவுகோல் அல்லது வரைமுறை இருக்கிறதா?

**தாவீது:** நிச்சமாக இருக்கிறது யோனத்தான். 1பேது.4:11 ஐப்படி

**யோனத்தான்:** "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்".

**தாவீது:** எது அளவுகோல் என்பதைப் புரிந்து கொண்டாயா யோனத்தான்? நாம் பிரசங்கிக்கும்போது தேவனுடைய வார்த்தையாகிய அவருடைய சத்தியத்தை மட்டுமே போதிக்கவேண்டும். மக்கள் விரும்புகிறார்கள் என்பதற்காக காலட் சேபங்கள் எதுவும் நடத்தக் கூடாது!

**யோனத்தான்:** நான் இதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இரு வேறு பிரசங்கியார்கள் இரு வேறுபட்ட கருத்துக்களை வேதாகமத்திலிருந்து எடுத்தே போதிக்கிறார்களே! உதாரணமாக "மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்ற வசனத்தை இப்போதும் ஊற்றப்படுகிறது என்று ஒருவரும் இப்போது ஊற்றப்படுவதில்லையென்று ஒருவரும் போதிக்கிறார்கள். இருவரும் வேதத்திலிருந்தே வசனங்களை எடுத்துச் சொல்கிறார்கள்.

**தாவீது:** இதற்கான சரியான பதிலை வேதத்தின் மூலமே அடுத்த முறை பார்க்கலாம் யோனத்தான்.

# ஒன்றாயிருக்க...

*Bro. John schwartz*

இன்று நாட்டில் பிரசங்கியார்களுக்குக் குறைவில்லை. வல்லமையான பிரசங்கங்கள், ஊழியங்கள்! ஆயிரக்கணக்கான, லட்ச கணக்கான மக்கள் கூட்டம் என்று பெருமை பேசிக் கொள்ளும் இந்நாட்களில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயங்களில் சிலவற்றைக் குறித்து நாம் சிறிதளவும் கவலையில்லாதவர்களாகவே இருக்கிறோம். அவைகளில் மிக மிக முக்கியமான ஒன்றைப்பற்றி சிந்திக்க உங்களை அழைக்கிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த போது பிதாவாகிய தேவனிடத்தில் கேட்டுக் கொண்ட மிகவும் முக்கியமானதொன்று "ஒருமைப்பாடு" ஆனால் பரிதாபம் நம்மிடையே காணப்படாதது ஒற்றுமை - ஒருமைப்பாடு என்ற அந்த பிரதான விஷயமே!

இதற்கு என்ன காரணம்? சிந்திக்க வேண்டியது அவசியம். நம்மிடையே காணப்படும் வேத அறிவு மிகவும் குறைவானது. இதை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளுவது இல்லை. நம்முடைய சுய கௌரவம் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. "நான் எத்தனை தலைமுறையாக கிறிஸ்தவனாக இருக்கிறேன். என்னுடைய பட்டம் என்ன? பதவி என்ன? நாம் வேதாகமப் படிப்பில் "அறிவர்" (டாக்டர்) பட்டம் பெற்றுவிட்டேன் சபையின் தலைமை பொறுப்பில் இருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டு ஒரு பேருண்மையை அறியாமலே இருந்து கொண்டிருக்கின்றோம். இது நாம் உண்மையான வேத அறிவைப் பெறவும் அதன் வழியாக ஒருமைப்பாட்டை அடையவும் தடையாக இருக்கிறது. எபேசியர் 4-ம் அதிகாரம் பிரபலமானது. 4-ம் வசனம் தொடங்கி 6-ம் வசனம் வரை "ஒரே" என்ற சொல் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்தும் அஸ்திபாரச் சொல்லாக இங்கே பயன்படுத்தப் பட்டுள்ளது, 3-ம் வசனத்தில் "ஆவியின் ஒருமையைக்காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" என்று வேத வசனம் நமக்கு ஆலோசனை கூறுகிறது. நம்மில் எத்தனை பேர் இந்த ஆலோசனைக்குச் செவிமடுத்துள்ளோம்.

ஒரே மேடையில் 30 சபைகளைச் சேர்ந்த தலைமைப் போதகர்கள் ஒன்றாயிருந்து கூட்டம் நடத்தி விட்டு, மேடையை விட்டு கீழே இறங்கியவுடன் ஒரு சபையைப் பற்றி இன்னொரு சபையின் தலைமைப் போதகர் கூறும் குறைகள் குற்றங்கள் சரீரத் தொடர்புடையவைகள் அல்ல. ஆன்மீகத்திற்கு அடுத்தவைகள். இப்படி ஒரே மேடையில் ஒன்றாக அமர்ந்திருந்தவர்கள் பின் தனித்தனியாக ஆளுக்கொரு கொள்கையை பின்பற்றுவதும் அதனடிப்படையில் ஊழியம் செய்வதும் ஒருமைப்பாடா? இல்லை. இது சற்று நேர சமரசமே! இதனால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ள இயலாது. எனவே யோவான்17:17-ல் கூறியிருப்பது போல "வசனமே சத்தியம்" அந்த வசனத்தின் அடிப்படையில் நாம் ஒன்றாயிருக்க எதிர்பார்க்கப்படுகிறோம். இதற்கு நாம் வசனத்தில் தெளிவான அறிவைப் பெறுவது அவசியம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை நம்மோடிருந்து நம்மை சத்தியத்தை அறியும் அறிவிலே தேறும்படி வழிநடத்த ஜெபிக்கின்றேன்.

## பொது அறிவுச் சோதனை

1. பாலின் நிறம் வெண்மையாக இருக்க காரணம் என்ன?
   அ)கரோட்டின் ஆ)கேசின் இ)ரெனின்
2. எவரெஸ்ட் சிகரத்தை சென்றடைந்த முதல் பெண்மணி யார்?
   அ)விஜயலட்சுமி ஆ)ஜுங்கோ தபேய் இ)எஸ்தர்
3. உலகில் முதன் முதலாக பெண் வீராங்கனைகளை கொண்டு படை உருவாக்கிய நாடு எது?
   அ)நியூசிலாந்து ஆ)தமிழ்நாடு இ)ஸ்காட்லாந்து
4. செல்களை ஆராயும் அறிவியல் பிரிவின் பெயர் என்ன?
   அ)சைடாலஜி ஆ)ஆர்ணித்தாலஜி இ)சைக்கலாஜி
5. மணியாடர் மூலம் பணம் அனுப்பும் முறையை ஏற்படுத்திய நாடு எது?
   அ)இந்தியா ஆ)அமெரிக்கா இ)பிரான்சு

விடைகள்: 1.ரெனின் 2.ஜுங்கோ தபேய் 3.நியூசிலாந்து 4.சைடாலஜி 5.அமெரிக்கா.



# ஞானதிஷ்டிக்காரன்

வேத பகுதி: 1சாமுவேல்9:6-13

ஞானதிஷ்டிக்காரன் என்றால் யார் என்று உங்களுக்கு தெரியுமா? தீர்க்கதரிசிகளே முற்காலத்தில் ஞானதிஷ்டிக்காரன் என்று அழைக்கப்பட்டனர். சவுலும் அவனுடைய வேலைக்காரனும் தன்னுடைய தகப்பனின் கழுதையைத் தேடிப் போனார்கள். பல நாடுகளில் தேடியும் கழுதை காணப்படவில்லை சூப் என்னும் நாட்டிற்கு வந்தபோது வேலைக்காரன் இதோ, இந்தப் பட்டணத்திலே தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார்; அவர் பெரியவர்; அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும்; அங்கே போவோம்; ஒரு வேளை அவர் நாம் போக வேண்டிய நம்முடைய வழியை நமக்குத் தெரிவிப்பார் என்றான்.

அப்பொழுது சவுல் தன் வேலைக்காரனைப் பார்த்து; நாம் போனாலும் அந்த மனஷனுக்கு என்னத்தைக் கொண்டுபோவோம்; நம்முடைய பைகளில் இருந்த தின்பண்டங்கள் செலவழிந்து போயிற்று; தேவனுடைய மனுஷனாகிய அவருக்குக் கொண்டு போகத்தக்க காணிக்கை நம்மிடத்தில் ஒன்றும் இல்லையே என்றான். அதற்கு அந்த வேலைக்காரன் என்ன சொன்னான் தெரியுமா? இதோ, என் கையில் இன்னும் கால் சேக்கல் வெள்ளியிருக்கிறது; தேவனுடைய மனுஷன் நமக்கு நம்முடைய வழியை அறிவிக்கும்படிக்கு, அதை அவருக்குக் கொடுப்பேன் என்றான்.

அன்பான தம்பி தங்கைகளே கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்ற வசனத்தின்படி வெறுங்கையாக தேவ மனிதனை சந்திக்க விருப்பமில்லாது, யோசனை செய்து தன்னிடத்திலிருந்த விலையேறப்பெற்ற கால்சேக்கல் வெள்ளியை ஞானதிஷ்டிக்காரனாகிய சாமுவேலுக்குக் கொடுக்க முன்வந்த அந்த வேலைக்காரனை சற்று யோசித்துப்பாருங்கள். நீங்கள் உங்கள் சபை போதகரை சந்திக்கும்போது வெறுங்கையோடே செல்கிறீர்களா? அல்லது அவர் நமக்கு ஏதாவது கொடுப்பார் என்ற ஏக்கத்தோடு செல்கிறீர்களா? தேவ மனிதன் தேவனுடைய வார்த்தைகளையே கொடுப்பான். நீங்கள்தான் பொருட்களினால் அவர்களை கனப்படுத்தவேண்டும். இதற்கு சவுலும் அவன் வேலைக்காரனும் நமக்கு நல்ல முன்மாதிரி. புதிய ஏற்பாட்டிலும் அநேகர் பவுல் போன்றோரை தங்கள் பொருட்களினால் கனப்படுத்தியதை நாம் வாசிக்கின்றோம்.

<u>மனப்பாட வசனம்</u>

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்"

(லூக்கா6:38)

## வேத அறிவுப் போட்டி எண்.59

*போட்டியாளர்கள் கவனத்திற்கு,*

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில்* ***இம்மாதம் 25-தேதிக்குள்*** *எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.*

1. சந்திரனை அண்ணாந்து பாரும், அதுவும் பிரகாசியாமலிருக்கிறது: எவைகளும் அவர் பார்வைக்குச் சுத்தமானவைகள் அல்ல?
2. எந்த தீவார் பவுலுக்கும் அவனுடன் வந்தவர்களுக்கும் அநேக மரியாதை செய்து, அவர்களுக்குத் தேவையானவைகளை ஏற்றினார்கள்?
3. கர்த்தர் வானத்திலிருந்து பெரிய கற்களை விழப்பண்ணி எந்த ஜனங்களை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஒப்புக்கொடுத்தார்?
4. நீதியைத் தேடாத புறஜாதியார் நீதியை அடைந்தார்கள்: அது எதினாலாகும் நீதியே?
5. யாதொரு சிலையையும் நிறுத்த வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் அதை என்ன செய்கிறார்?
6. மேன்மைபாராட்டுகிறவன் யாரைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்?
7. நான் உம்முடைய முகத்தைக் கண்டது தேவனுடைய முகத்தைக் கண்டதுபோல இருக்கிறது என்று யார் யாரைப் பார்த்து சொல்வது?
8. கர்த்தர் ஆலோசனையில் எவ்விதமானவர், செயலில் எவ்விதமானவர்?
9. முள்செடிகளையும் முள் பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது அதின் முடிவு எப்படிப்பட்டது?
10. எல்லாவற்றிலும் எவராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்?

## நடப்புச் செய்திகள்

- தமிழ் நாட்டில் பொதுமக்களுக்கு 4 வகையான ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டடு வருகிறது.
- திண்டுக்கல் அருகே தோட்டத்தில் கிடைத்த தங்ககாசு புதையல் பழனி அரசு அருங்காட்சியத்தில் ஒப்படைக்கப்பட்டது.
- இந்தியாவின் மிகப்பெரிய வங்கியான பாரத ஸ்டேட் பேங்க் (எஸ்.பீ.ஐ) சர்வதேச போட்டியை சமாளிக்க அதன் துணை வங்கிகளை தன்னுடன் இணைத்துக் கொள்ள திட்டமிட்டுள்ளது.
- திருச்சி கோர்ட்டு வளாகத்தில் ஆங்கிலேயர் ஆட்சிகால நீச்சல்குளம் கண்டுபிடிப்பு.
- இந்திய கிரிக்கெட் அணிக்கு புதிய பயிற்சியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் கிரேக் சேப்பல் ரொம்ப உற்சாகத்தில் உள்ளார்.

Owned and published by B.Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: **B.Arjunan.**


Registered with Registrar of Newspapers for India under No.TNTAM/2000/3629
Postal Registration. No. TN/SR-164/2003-2005 Lincensed to Post without prepayment
License No.TN/WPP-25/SR/2003-2005 Posted at Batlagundu Post Office on 10th July 2005



**எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க**
**அன்புடன் அழைக்கிறோம்**

## கிறிஸ்துவின் சபை

**17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202**
**திண்டுக்கல் மாவட்டம்.**
**போன்: 04543-263278 செல்: 9443558041**
E-mail:thewordofchrist@sancharnet.in
arjunglory@yahoo.co.in



"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

'ஒரே வழி' தபால்வழி வேதபாடதிட்டம்
**The Master Course**
தமிழில்
இருபது வயதிற்கு மேற்பட்டவர்கள்
இன்றே ரூ.15/- செலுத்தி
இப்பாடத்திட்டத்தில் சேர்ந்து ஒரு வருடத்தில் முடித்து
Certificate பெற்றுக்கொள்ளுங்கள்
**THE ONE WAY**
**BATLAGUNDU BIBLE COLLEGE**
P.O. Box 5, BATLAGUNDU - 624 202
S.INDIA




**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் ஆண்டு சந்தா
இந்தியா -ரூ.50/-
வெளிநாடு - ரூ.500/-
தனிப் பிரதி - ரூ.5/-

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box 5
Batlagundu - 624 202
S. India